# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# ஆண்டிறுதிப் பரீட்சை 2023

ஆண்டு 4 திகதி: 25.11.23

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்கள்: திருமதி. சா. விஜயநாதன்
உதவி: டேனிக்கா இரவீந்திரராஜா

மாணவர் பெயர்: ______________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளிகள்** | **பெற்ற புள்ளிகள்** |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 15 | |
| வினா 6 | 25 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

தமிழர்களது அழகியற் கலைகளில் கோலம் இடுதலும் ஒன்று. கோலம் என்ற சொல்லுக்கு அழகு என்ற பொருளும் உண்டு. வீட்டின் உட்புறத்தை அழகு செய்வது போல் வெளிப்புறத்தையும் அழகுபடுத்துவதே கோலம் இடுதலின் நோக்கமாகும். கோலம் தமிழ்ப் பெண்களின் கற்பனைத் திறனையும் அழகு உணர்வையும் எடுத்துக் காட்டுவது ஆகும். பழந்தமிழ் நூல்களில் கோலம் இடுதல் பற்றிய செய்திகள் உள்ளதால், பண்டைக் காலந்தொட்டே தமிழர்களது கலாசாரத்தில் கோலமும் பங்கு கொள்வதை அறிய முடிகிறது. கோலம்இடுவதற்கு இந்நாளில் மாவிலான வண்ணப் பொடிகளையும், சாயமிட்ட தேங்காய்ப்பூவையும் பயன்படுத்துகின்றனர். கிராமங்களில் கிருமி கொல்லியான சாணத்தினால் முற்றத்தை மெழுகி கோலமிடுவர். கோலம் இடும் முறையைக் கொண்டு அது புள்ளிக் கோலம், கோட்டுக் கோலம் என இரு வகைப்படும். பண்பாட்டு மரபுகளை பேணும் வகையில் புலம்பெயர் நாடுகளிலும் தமிழர் கோலம் இடுகின்றனர். கலைவிழா, தைப்பொங்கல் விழா போன்ற கொண்டாட்டங்களின் போது, விழா மண்டபவாயில்களில் கோலம் இட்டு அழகுபடுத்துவர். கோலம் கண்ணுக்கு இன்பத்தையும் உள்ளத்துக்கு புத்துணர்வையும் அளிக்கிற கலையாகும்.

1) வீட்டின் எவ்விடத்தில் கோலம் இடுவர்?

___

2) கோலமிடப் பயன்படுத்தும் பொருட்கள் எவை?

___

3) சாணத்தின் இயல்பு என்ன?

___

4) புலம்பெயர் நாடுகளில் எப்போது கோலமிடுவர்?

___

5) கோலம் எவற்றை அளிக்கிற கலை?

___

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

**2.1 பின்வரும் சொற்களை வைத்து கீறிட்ட இடங்களை நிரப்புக.**

முதலை, சிட்னியில், கார்காலத்தில், விவசாயக் கண்காட்சி, உரோமம்,

1. ஈஸ்டர் விடுமுறையின்போது சிட்னியில் ____________________ நடைபெறும்.
2. பிளற்றப்பஸின் உடலில் ____________ உண்டு.
3. அவுஸ்திரேலியாவின் பாராளுமன்றம் ____________ உள்ளது.
4. கன்பராவில் ____________________மரங்களின் இலைகள் சிவப்பு நிறமாக மாறும்.
5. ஆதிவாசிகள் சிலருக்கு ________________ ஒரு சமயச் சின்னம் ஆகும்.

2.2 பிரித்து எழுதுக

1. கண்காட்சி = ____________+ ____________
2. கத்தரிக்கோல் = ____________ + ____________
3. முதற்பரிசு = ____________+ ____________
4. வாழ்க்கைமுறை = ____________+ ____________
5. தலைமுறை = ____________+ ____________

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**தொடர்புபடுத்துக**

| | |
|---|---|
| தமிழர் | தலைநகரம் |
| கன்பரா | நோயாளி |
| காட்சி | இளவேனில் |
| காலநிலை | சாலை |
| வைத்தியர் | தமிழ்மொழி |

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

பின்வரும் சொற்களை வைத்து நான்கு சொற்களுக்கு குறையாமல் வசனம் எழுதுக.

(1) அதிகாலை : ________________________________________

(2) விவசாயி : ________________________________________

(3) கலாச்சாரம் : ________________________________________

(4) பாடசாலை : ________________________________________

(5) ஆதிவாசிகள் : ________________________________________

| வினா இல | 5 | புள்ளிகள் | 15 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

உமது நண்பன் தமிழ் பாடசாலைக்கு செல்வதில்லை. அவருக்கு ஏன் தமிழ்ப் பாடசாலைக்கு சென்று படிக்க வேண்டும் என்று அறிவுரை கூறி கடிதம் ஒன்று எழுதுக

| வினா இல | 6 | புள்ளிகள் | 25 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றி 50 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.

1. அவுஸ்திரேலியாவின் பருவகாலங்கள்
2. எனது தமிழ்ப் பாடசாலை
3. எனது நண்பன்